# THE MORNING STAR

*Registered as a Newspaper.* ( Established 1841 ) Published Every Friday

Vol. 135 JAFFNA, FRIDAY, 5TH DECEMBER, 1975. No. 48

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## Nairobi Assembly Opens

Over 2300 Delegates gathered for the opening ceremony of the 5th Assembly of the World Council of Churches in the open square outside the Kenyatta Conference Centre in Nairobi on Sunday the 23rd of November. The Assembly was led into the conference hall by the Most Rev. Festo Olang, Archbishop of East Africa and Bishop of Nairobi. There was an attempted interruption before the procession by the Rev. Jack Glass of Scotland protesting against the World Council's soft stand on Roman Catholicism and Communism. He was quickly restrained. At the opening service the sermon was preached by an African in French, on the theme "Jesus Christ frees and Unites"

The theme of violence in relation to the liberation movements is one of the dominating themes at the Assembly. The programme to combat racism which receives the World Council's support especially in African countries still under White domination came under considerable criticism.

A dramatic plea on behalf of the Russian Orthodox Church whose members, it is claimed, are being persecuted and subjected to psychiatric torture was made to the Assembly in an eleven page letter signed by two Moscow Priests. The letter was smuggled into Nairobi and is now circulating among Delegates. The writers condemned the Assembly for remaining silent while half the Russian Church is being destroyed and urged action to bring the plight of Russian Christians to the attention of the rest of the World.

## Human Rights Day

A Seminar will be held at Trimmer Hall, Jaffna, on Wednesday, December 10 at 5 p. m. under the joint auspices of the Counil of Public Affairs and the Parents Association of Jaffna. Dr. K. Kanagaratnam will chair the meetiny. Participants will include Mr. C. Subramaniam (Freedom of the Press), Mr. K. Nesiah (The University and the Freedom of learning), and Mr. L. A. T. Williams, Attorney-at-Law (Legality of 'Standardisation' in the context of the Human Rights Charter).

---

## IN BRIEF ......

● The Uniting Church in Australia which will link Congregationalists, Methodists and Presbyterians will be inaugurated on June 22, 1977. It was originally scheduled for June 6, 1976 but was delayed by a Court case.

*REPORT FROM NAIROBI*

### Dr. Robert McAfee Brown's keynote address on

## JESUS AS LIBERATOR, UNIFIER

"We should be encouraged rather than discouraged by the diversity of answers to the question 'Who is this Jesus?' ", said Dr. Robert McAfee Brown, a professor of theology from California, in the major theological address of the Fifth Assembly of the World Council of Churches at Nairobi.

Dr. Brown was speaking on the theme, "Who is this Jesus Christ who frees and unites?" He based his address on the question Jesus asked of his disciples in Matthew 16: "Who do people say that the Son of Man is?", and continued, "Clearly this Jesus cannot be confined by any formula, theological or otherwise. He breaks out of all the little boxes in which we try and imprison him."

Dr. Brown went on to say that Christians have an obligation to listen before they proclaim, to know what is being said by the Jew, the Hindu, the Marxist, the humanist, and to believe that "we can learn from them, rather than assuming that they must learn exclusively from us".

But Jesus Christ also addresses us, asking: "Who do you say that I am?" In answering this question we are forced to examine who we are.

Illustrating from his own experience, the noted Presbyterian (Reformed) theologian described as "white", "male", "a member of the relatively affluent class", and "a citizen of the USA", symbolizing (though not personally embodying) the oppressions of racism, sexism, classism and imperialism. He then drew attention most geographically to one other form of imperialism that of language. Symbolically he switched to Spanish so that non-Spanish speakers would have a chance to see what it is like for Latin Americans at most ecumenical gatherings.

Each day at Nairobi participants will be confronting Jesus' question and meeting others striving to answer it. Dr. Brown invited his hearers to listen particularly to those answers that initially threaten them most.

"If your present answer focuses on Jesus the personal Saviour", he said, "then be willing to confront Jesus the Liberator whose social message threatens all the human securities you take for granted. If Jesus the Revolutinary is the one who now gives you hope, then heard also the Jesus who reminds you that evil is embodied not only in the oppressive social structures but also in every human heart."

Speaking of Jesus the Liberator, Dr. Brown said he frees us "*from* the false securities by which we try to make our lives secure" and "*for* the possibility of seeing the world through eyes other than our own".

"For our time", he said, "to see the world through eyes other than our own has simply got to mean seeing it through the eyes of the poor and dispossessed". Noting that the cry of the hungry is overwhelming, he said: "For this time and this place, the claim of Jesus to bring freedom, and the cry of oppressed peoples for freedom converge and cannot be separted."

Quoting the Latin American theologian Gustavo Gutierrez, Dr. Brown urged reaching out to the *non-person* the one the world ignores, uses, crushes and then discards, whose cry not only for food but for meaning in life is simply not heard.

Jesus frees us to struggle with and on behalf of those "others" who are poor and dispossessed.

"I can be freed to struggle for a world in which my own standard of living will have to be significently lowered, as we work for a more equitable distribution of the world's resources through a restructuring of our political and economic systems."

He drew applause with the statement that he as a US citizen could be freed to struggle for a world "in which napalm is no longer an instrument of diplomatic pressure."

But Jesus also divides, Dr. Brown said. Commitment to him divides Christians from the majority of the human family who make no such commitment including Jews, Hindus, Buddhists, Marxists and humanists. In addition to sociological divisions, Jesus' sermon at Nazareth pointed another type of division. "The good news he brings to one group is (initially at least) bad news to another group. If Jesus' liberating message is good news to the poor, it means that the rich stand to loose something. If slaves are freed, slave owners feel threatened."

Noting that the Latin American liberation theologians use the story of the Exodus as a framework for proclaiming liberation today, Dr. Brown continued: "If it is good news to South Americans that God promises to free

*(Contd. on last page)*

## Development Thrusts

A new ethos to promote development initiatives in Asia was the subject of intensive discussions held recently at the CCA Office, Singapore. Such an ethos would mean that the churches must play a positive role in the development struggle in the use of their land and money, in the process of education and in the form which their life takes. It was felt that two kinds of breakthrough were needed. Firstly withtn the church, from an elitist way of viewing opportunities for a change to one rooted in the people. Secondly among church leadership from consultation to involvement in action programmes.

---

*WEDDING*

### Thuraisingam — Singaratnam

The marriage was solemnised at 4-30 p. m. on Friday, 28th of November at the C. S. I. Church, Udupiddy of Mr. Benjamin Wijeanathan Thuraisingam son of Mr. and Mrs. C. A. Thuraisingam of Chavakachcheri and Miss Suganthini Singaratnam, daughter of Mr. R. Singaratnam, Retired Principal of Atchuvely Christian College and Mrs. Singaratnam of Udupiddy.

Rev. Sam Thampoe officiated assisted by Rev. E. R. Rajaratnam. Rev. K. S. Jeyasingam preached the homily. A reception followed at the bride's residence, "Sukantham," Udupiddy.

---

## HOUSE FOR RENT

Rev. Paul's bangalow

Love Lane, Uduvil.

*Apply:—*

**Mrs. Sathianadhan,**

Holy Trinity Church,

NUWARA ELIYA.

---

## IN MEMORIAM

LOVING MEMORY

OF

**Mrs. Margaret Sornam Welch**

Departed from this Life on 6-12-68

*" How joyful is the hope*
*that lingers*
*When loved ones cross death's sea*
*That we, when all earth's toils*
*are ended*
*With them shall ever be."*

Remembered with much affection by her loved ones.

# உதயதாரகை
UTHAYATHARAKAI
Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 135 ] 5 — 12 — 1975 [ இதழ் 48


## 'மனிதனை மனிதனாய் மதித்து நடத்து'!

இன்று உலகமனைத்திலும் 'மனிதனை மனிதனாய் மதித்து நடத்து' என்ற உரிமைக் குரல் ஒலிக்கின்றதை நாம் கேட்கின்றோம்.

வெள்ளையர் கறுப்பர் உறவானாலும், தொழிலாளி முதலாளி உறவானாலும், ஆள்வோர் ஆளப்படுவோர் உறவானாலும், எத்தகைய மனித உறவும் மனிதாபிமான அடிப்படையில் அமையவேண்டுமென்பதே இன்றைய மக்களின் கூக்குரலாகும்.

இந்த நூற்றாண்டில்தான் இப் புதுமைக் குரல் எழுந்தது என்பதல்ல. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் பலஸ்தீன தெருக்களிலே ஒலித்த புனிதக் குரலிது.

இயேசு பெருமான் மனிதனை மனிதனாய் நடத்தினார். அவருக்கு எந்த மனிதனும், மனுக்குலத்தின் ஓர் உறுப்பாக, இறைவனின் மக்களாகக் கண்டார். அவர்கள் அனைவரையும் பரமனின் மக்களென அன்புடன் அணைத்தார். அவர்களுக்கு நல் வாழ்வு ஈந்தார்.

கிறிஸ்து பெருமான் வருகின்ற இடத்தில் மனுக்குலத்தைப் பிளவுபடுத்தும் சாதி சமய வேறுபாடுகள், உயர்வுதாழ்வு என்ற தடுப்புச் சுவர்கள் தகர்த்தப்படுகின்றன. மக்களனைவரையும் ஒன்றுபடுத்துகிறார்.

இந்த உண்மையைத்தான் புனிதர் பவுலடியார், "இனி உங்களிடையே யூதனென்றும் கிரேக்கனென்றும் அடிமையென்றும் அடிமையல்லாதவனென்றும் ஆணென்றும் பெண்ணென்றும் பாகுபாடில்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்பட்டு ஒரே ஆளாயிருக்கிறீர்கள்." "கிறிஸ்துவே பிரிவினைக்குக் காரணமாக இடையில் சுவர்போல் நின்ற பகைமையை அகற்றினார்" என்று இயம்பினார்.

கடவுளின் திருக்குமாரனாகிய எம்பெருமான் மானிட உடல் எடுத்ததே மனித மேன்மைக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

கல்கத்தா நகரிலே நலிந்து நிற்கின்ற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வந்தார் அன்னை தெரேசா. ஏழையோடு ஏழையாய் வாழ்ந்து, அவர்களின் இன்னல்களில் தானும் பங்குகொண்டு, அவர்களுக்குப் புனர்வாழ்வு அளித்து வருகிறார் இவ்வம்மையார்.

இவர்களும் மனிதர்கள். தம் உரிமைகளைப் பெற்று வாழும் சந்தர்ப்பம் இவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதை அன்னை தெரேசா உணர்ந்தார். அதனைச் செயல்படுத்திக் காட்டினார்.

இயேசு பெருமான் காட்டிய இச்சிறந்த வழியை நாமும் கடைப்பிடித்து, மனிதரை மனிதராக மதித்து, அவர்களின் அடிப்படை உரிமைகளுக்காக விடாதுழைப்பது நம் கடமை. இயேசு தரும் வாழ்வில் மனிதன் தன் நிறைவைக் காண்பான். இவ்வாழ்வைப் பெற்றிருக்கும் நாம், இதனை மற்றவர்களும் பெறும் உரிமையை அவர்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

---

## ஐ. நா. மனித உரிமைகள் தினமும் — அனைத்துலகச் சிறுபான்மை மக்களும்

1948 ஆம் ஆண்டு திசெம்பர் 10 ஆம் நாளிலேதான் அகல்விரிவான மனித உரிமைகள் பிரகடனததை ஐ. நா. பொதுச்சபை விடுத்தது. ஐ. நா. பொதுச் சபையின வேண்டுதலின்பேரில அனைத்துலக நாடுகளும வருடா வருடம் திசெம்பர் 10 ஆம் நாளை "மனித உரிமைகள் நாளாக" அனுட்டித்து வருகின்றன.

மேற்படி மனித உரிமைகள் பிரகடனத்தையே ஐ. நா "மனித உரிமைகள சாசனம்" உள்ளடக்குகினறது. மனிதப் பிறப்பின் மேனமையை இதல் ஈடுபட்ட யாவரும அங்கீகரிக்க உடன்பட்ட காரணத்தால், மனிதனுக்கு இயல்பாக வரும் உரிமைகள், சுதந்திரங்களை மனிதனது பிறபபுரிமைகளாகப் பறைசாற்றும வகையில தனித்தனியாக அவற்றை வரையறுத்துப் பின "மனித உரிமைகள சாசனமாக" அவ்வுரிமைகள், சுதந்தரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஆயினும், உலகெங்கும் மனித உரிமைகள நேர்சீராக அமுலநடத்தப்படுவதை அவதானிக்கவும், மனித உரிமைகள மீறப்படும்பொழுது பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நிவாரணம வழங்குவதற்காகவும் "மனித உரிமைகள் மீதான ஐ. நா. ஆணைக குழு" தொடர்நதும பணியாற்றி வருகின்றது.

1973 — 1983 வரையுள்ள பத்து ஆண்டுக் காலத்தை இன பேதத்தையும், இன வேறுபாட்டையும எதிரத்துப் போராடுவதற்கான நடவடிககைகளை மேற்கொளவதற்கான பத்தாணடாக மேற்படி 'மனித உரிமைகள் மீதான ஐ. நா. ஆணைக் குழு' அங்கீகரிததிருப்பதை "மனித உரிமைகள் தினத்தில" நினைவு கூருவது பொருததமானதே! உலகெங்கும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வரும தேசிய சிறுபான்மை மக்களுக்கு. இது பெரும் நமபிக்கை அளிக்கும் செய்தியாகும். உள்நாட்டார் தலையீட்டுககு இடமில்லை என்று சொல்லி அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் தேசிய சிறுபானமையினர் பிரச்சினைகளைக் குடியேற்ற நாடுகளாலும் இனிப் போர்த்து மூடவியலாது. கூட்டுச் சேரா நாடுகள் ஐ. நா பொதுச் சபையில் பெரும்பானமையாக இடம்பெற்றதிலிருந்து போத்துக்கல் நாட்டின் குடியேற்ற நாடுகளுக்கும் தென்னாபிரிக்கா, ரொடீசியா நாடுகளுக்கும் மாறாக எடுக்கப்பட்ட ஐ. நா. முடிபுகளும், நடவடிக்கைகளும அதற்குச் சான்றாகும். இவை யாவற்றுக்கும் உலகப் பொது அபிப்பிராயமே பெரிதும் தூண்டுகோலாகும்.

இனபேதத்தையும், இன ரீதியிலான பாரபட்சத்தையும் எதிர்க்கும் நடவடிக்கைகளாக மேற்படி மனித உரிமைகள் மீதான ஆணைக்குழு தேசிய ரீதியிற் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உலக நாடுகளைக் கோரியுள்ளது:—

இன வேறுபாடு பாராட்டும் அரசாங்கங்களுக்கு ஆதரவளிப்பதைத் தவிர்த்தல்.

இனவேறுபாடு பாராட்டலைத் தவிர்க்கும் அல்லது முடிவுக்குக் கொண்டுவரும் பொருத்தமான சட்டங்களை ஆக்குவதும், உரிய நடவடிககைகளை மேற்கொள்ளுதலுக்கும் அதிக முதன்மை தருதல்.

இன வேறுபாடு பாராட்டப்படும் பாரபட்ச நடவடிக்கைகளுக்கு உள்ளாகும் பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கு உபகாரச் சம்பளப்படிப்புக்கு ஒழுங்கு செய்தல்.

சகலவிதமான இனவேறுபாடுகளையும் ஒழிப்பதன் மீதான அனைத்துலக மரபை ஏற்றுக்கொள்வதும், உறுதிப்படுத்துவதும், நேர்சீராக அவற்றை அமுல் செய்தலும்.

எதுகாரணத்தாலும், யாதொரு அடிப்படை மீதும் கல்வியில், பாடசாலைகளது ஒழுங்குகளில், சட்டங்கள் மற்றும் குடிவரவுக் கொள்கைகளில பாரபட்சம் காட்டாது இருத்தல்

அனைத்துலக ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் இன வேறுபாட்டிற்கும், இன அடிப்படையிலான பாரபட்சத்துக்கும் எதிரான ஓர் அனைத்துலக மாநாட்டை மேற்குறிப்பிட்ட 10 வருட காலத்துக்குள் கூட்டுவதும், இடைப்பட்ட காலததில் அனைத்துலக, மற்றும் பிராந்திய கருத்தரங்குகள், மாநாடுகளைக் கூட்டி இன வேறுபாட்டாலும், இன அடிப்படையிலான பாரபட்ச நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்டு இன்னலுறும் சகல ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் உதவுவதற்கான காத்திரமான வழிவகைகளைத் தயாரித்தலும அவசியமென்று மேற்படி 'மனித உரிமைகள் மீதான ஆணைக்குழு' அறிவித்துள்ளது

அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாக காலனித்துவ ஆட்சிகளின் கீழ் சிக்கியிருக்கும் மக்கள் யாவரது சார்பிலும் எமது சிந்தனை, செயல் யாவும் "மனித உரிமைகள் தினத்திலாவது" அத்திசையில் திருப்பப்படவேண்டும் என்பதே எம் விருப்பம்.

அநியாயத்தை எதிர்ப்பதற்கும், அநியாயத்துக்குத் துணைபோகாது இருப்பதற்கும் தேசிய சிறுபான்மை மக்களும் மனப் பக்குவம் பெற எதிர்வரும் மனித உரிமைகள் தினம் உதவுவதற்காக இந்நாளை ஏற்ற முறையில் அனுட்டிப்போம்.

— சா. ஆ.

---

## மனித மேன்மையும் — மனித உரிமைகளும்

நிற பேதம் காரணமாக தென்னாபிரிக்காவில் கறுப்பு இன மக்கள் வெள்ளையர்களால் இன வொதுக்கலுக்கு உள்ளாவதைச் சகிக்கமாட்டாதவராகப் பொங்கி எழுந்தார் மகாத்மா காந்தியடிகள்.

நிறவேறுபாட்டுக்கும் அதன் வாயிலாக வந்த பாரபட்ச நடவடிக்கைகளுக்கும் எதிராகத் தென்னாபிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய இயக்கமே இந்திய காங்கிரஸ் இயக்கத்துடனும் அதன் தலைவர் கோகலேயுடனும் காந்திக்குத் தொடர்பு ஏற்படுத்தியது. அங்கு நிறவெறிக்கு எதிராக அவர் நடப்பித்த இயக்கமே சாத்வீக சத்தியாக்கிரகம், சாத்வீக மறியல், ஹர்த்தால் போன்ற அகிம்சை வழிப் போராட்டங்களுக்குத் தோற்றம் அளித்தது. பின்னர், இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமையேற்ற நாளிலும் காந்தியடிகள் மனிதனை மனிதன் சாதி, இன, மொழி, மத, நிறம் அல்லது பால் வேறுபாடு காரணமாக இம்சிப்பதை எதிர்த்தே வந்தார். தாழ்த்தப்பட்ட மக்களின் மீட்சிக்காகவும் கடைசிவரை பாடுபட்டார். தம்மைத் தாமே ஒரு ஹரிஜன் என்று அழைத்த காந்தியடிகள் ஹரிஜன மக்களின் விடுதலைக்காக "ஹரிஜன்" என்ற பெயரால் ஒரு பத்திரிகையையும் நடத்திவந்தார்.

காந்திக்கு முன் அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கறுப்பு இனத்தவரின் சுதந்திரத்துக்காக உள்நாட்டுப் போரையே எதிர்நோக்கச் சித்தமாகவிருந்தார். அமெரிக்காவில் தனி மனித அடிமைத்தனம் - அடிமைகளை உடைமையாக வைத்திருக்கும் நிலை மாற, அவர் தம் உயிரையே அர்ப்பணித்தார். காந்திக்குப் பின் அப்போராட்டத்தை காந்தி வழி நின்று சாத்வீக வழியில் தொடர முற்பட்ட அருட்திரு. மாட்டின் லூதர் கிங் அவர்களும் தமது இன்னுயிரைப் பலி கொடுத்தார். தனி மனித சுதந்திரத்துக்காகத் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தவர் வரிசையில் ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தியடிகள், வண. மாட்டின் லூதர் கிங் என்பாருடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எப். கென்னடியையும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிக்கான வாய்ப்பை நோக்கித் துரிதமாக முன்னேறிக்கொண்டிருந்த வேளையில் அதே துப்பாக்கிக்குப் பலியாகிய ரொபேட் கென்னடியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஐக்கிய அமெரிக்காவின் தெற்கு நாடுகளில் கறுப்பு இன மாணவர் நிற பேதம் காரணமாக பல்கலைக்கழகங்களில் அனுமதி மறுக்கப்பட்டனர். கறுப்பு இன மாணவருக்கு எதிராக ஆங்கமைந்த பல்கலைக்கழகங்கள் கதவடைப்புச் செய்தன. பஸ்களில் பயணிகளுக்கு இடம் ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. இதனை எதிர்த்தே வண. மாட்டின் லூதர் கிங் இன வேறுபாடு காட்டி வருவதற்கு எதிராக, உலகப் புகழ்பெற்ற, பஸ்களைப் பகிஸ்கரிக்கும் இயக்கத்தை ஆரம்பித்து அதில் வெற்றியும் பெற்றார். தொழிலாளர் எவ்வித நீண்ட தூரத்தையும நடந்தே தீர்த்தனர். தொழில் நிலையங்களுக்கான அவர்களது போக்கும் வரவும் கால்நடைப் பயணமாக இருந்ததால் தொழில், இடங்களில் அவர்கள் சோர்வடையத் தலைப்பட்டனர், இளைஞர் மட்டுமலல பெண்களும் முதியோ

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### அருள் வாக்கு

"நீ அஞ்சாதே, நான் உன்னோடிருக்கிறேன்; நம்பிக்கையில் தளராதே, நான் உன் கடவுள்; நான் உன்னை உறுதிப்படுத்தி, உனக்கு உதவி செய்வேன்; என் நீதியின் வலக் கை உன்னைத் தாங்கிக் கொள்ளும்."

— ஏசாயா. 41 : 10.

# கிறிஸ்து பிறந்தபோது நடந்ததென்ன?

— S. ஜெயநேசன் —

கிறிஸ்மஸ் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடப் பல ஆயத்தங்கள் செய்கிறோம். அந்தக் கொண்டாட்டத்துக்காக நமது பிள்ளைகள் நட்சத்திர வடிவில் கூண்டு விளக்குகளைச் செய்வதில் தங்கள் முயற்சிகளை எடுப்பர். கிறிஸ்மஸ் அலங்காரங்களில் உள்ளத்தைக் கவர்வது வெளிச்ச கூண்டு விளக்குத்தான். சின்னஞ் சிறு பிள்ளைகளின் சிரிய முயற்சி — அயராத உழைப்பு — அழகுணர்ச்சி அத்தனையினதும் விடைதான் இவ்விளக்குகள். கிறிஸ்து பெருமானின் பிறப்பின் மங்கல மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் இது ஒரு மகிழ்விளக்கு. "நானே உலகின் ஒளி" (யோ 8 : 12) என்று கூறிய மீட்பரின் எல்லையில்லாத அன்பினுக்கு அடையாளமாவதால் இது ஓர் அன்பு விளக்கு. கிறிஸ்து பிறப்பின் மங்கல உணர்ச்சியினை நம் இல்லங்கட்குக் கொண்டு வருகின்றது, இந்தக் கூண்டு விளக்கு.

கிறிஸ்மஸ் சமயத்தில் ஒளி ஏற்றும் வழக்கம் மார்ட்டின் லூத்தர் காலத்தில் தொடங்கியது. முதன் முதலில் லூத்தர் குடும்பத்திலும் பின்னர் 'பாஸ்டன்' நகரில் பீக்கன் மலையில் வாழ்ந்தவர்களிடம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வழக்கம் தோன்றியது. பின்னர், இவ்வழக்கம் உலகமெங்கும் பரவியது.

கூண்டு விளக்கு வேறொரு பொருளையும் குறிக்கிறது. பாலன் இயேசுவைப் பணிந்து கொள்ள வந்த வானியல் அறிஞர் பெருமக்கள், அல்லது வேந்தர் என அறியப்படும் மூவர் ஆவலுடன் ...கீழ் நாட்டிலிருந்து அவர்கட்கு வழிகாட்டியது ஒரு வான்வெள்ளி. இந்த வான் வெள்ளியின் அடையாளமாகவும் கூண்டு விளக்குகள் இன்று தொங்கவிடப்படுகின்றன.

சற்று இந்த வான் வெள்ளியை ஆராய்வோம். அந்த வான் வெள்ளி தோற்றியது உண்மையா? வானியல் வரலாற்றில் அதற்குரிய பதிவேடுகள் ஏதாவது உண்டா? இவ்வினாக்களுக்கு விடை பகர இரண்டு உண்மைகளைத் தெரிந்தெடுத்தல் வேண்டும். அக்காலத்தில் வானியலுக்கும், சாத்திரத்துக்கும் மிக்கத் தொடர்பு காணப்பட்டது. வானில் புதியனவாகத் தோன்றும் நட்சத்திரங்கள் உலகின் சிறப்பு நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பன என வானியல் அறிஞர்கள் கருதினர்.

இரண்டாவது, வரலாற்று நிகழ்ச்சிகளையும், உண்மைகளையும் உயர்வு நவிர்ச்சியாக — சற்று மிகைப்படுத்திக் கூறும் வழக்கமும் அக்கால அறிஞர்களிடையே காணப்பட்டதெனச் சில ஆய்வாளர் கருதுகின்றனர். ஒரு நட்சத்திரம் தோன்றியது, வான நூலறிஞர்கள் அதனைக் கண்டு பெத்தலை ஊர்நோக்கிச் சென்றார்களென்பது உண்மை நட்சத்திரம் நகர்ந்தது என்பது வரலாற்று மிகைப்படுத்தல் எனச் சிலர் கருதுகின்றனர். திசை பார்க்கலாம், திட்டமான இடம் பார்க்கமுடியாது. விண்மீன்தான், நாம் போகிற இடமெல்லாம் உடன் வருவது போல் தோற்றமளிக்குமே. எனவே, "நட்சத்திரம் நல்ல சத்திரம்வரை வழிகாட்டிக்கொண்டே உடன் வந்தது" என்பதன் உட்கருத்தினை நாம் தெரிந்து கொள்ளத் தவறிவிடக்கூடாது. அன்றும் அறிவியலுக்குக்கூடப் பொருத்தவில்லையே எனப் புறக்கணிந்தும் விடக்கூடாது.

நட்சத்திரம் தோன்றியது உண்மையே. கிறிஸ்து பிறந்த ஆண்டு சிலர் கி. மு. 6 என்பர். கி. மு. 6-ம் ஆண்டில், சனிக் கிரகமும் (Saturn) வியாழ கிரகமும் (Jupiter) மிக நெருங்கி வந்தனவாம். கோள் சந்திப்பு நிகழ்ந்ததாம். சனி — வியாழன் நட்சத்திரச் சந்திப்பு நேரிடுங்கால், 'மேசியா' பிறப்பார் என்பது யூதர்களின் பெருங்கால நம்பிக்கையாய்ப் பெருகித் தேங்கியிருந்தது.

இதோ! எதிர்பார்த்த வண்ணமே நட்சத்திரங்கள் சந்திக்கின்றன வானியல், மறைபியல் அறிஞர்களும் கண்டு கண்டு களிக்கின்றனர்; ஒருவருடன் ஒருவர் உரையாடி ஆனந்தப்பட்டனர். மேசியாவின் பிறப்புக்கு அடையாளம் என்றனர். மூன்று முறை சந்திப்பைக் கண்டபோது ஆழமான நம்பிக்கை கொண்டனர். முதல் முறை சந்திப்பை மே மாதம் கண்டு மகிழ்ந்தவர்கள்; இரண்டாம் சந்திப்பை அக்ரோபரில் கண்டு, உறுதிகொண்டு பாபிலோனிலிருந்து புறப்படுகிறார்கள். மூன்றும் முறைச்சந்திப்பில் டிசம்பர் மாதத்தில் பெத்தலை வந்து சேர்கிறார்கள். வரவர ஒரே நட்சத்திரம் போன்றே தோன்றுமளவுக்கு சனியும், வியாழனும் அந்த ஆண்டு நெருங்கி வந்தனவாம்.

சீன நாட்டில் ஒரு புதிய அற்புத நட்சத்திரம் பலகாலம் தெளிவாகத் தோன்றினது. கி. பி. 5-ம் ஆண்டு தெளிவாய்ப் பிரகாசித்ததாக, சீன நாட்டு வானியல் வரலாறு கூறுகின்றது.

1973-ம் ஆண்டு 'கோகூடெக்' என்னும் (Kohoutek) வால் நட்சத்திரம் கிறிஸ்மஸ் காலத்திற் காணப்படும் என வான நூல் அறிஞர் அறிவித்திருப்பதை செய்தித் தாள்களில் நாம் படித்தோம். மேற்கூறிய நிகழ்ச்சிகளைப் போன்றஒன்று இரட்சகர் இயேசு பிறந்த போதும் நிகழ்ந்தது என்பது திண்ணம்.

இறைவன் இயேசு உலகிற்குத் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பதே இப்பண்டிகையின் செய்தி. வானியல் அறிவால் இயேசுவைக் கண்டுகொண்டனர். இக்கீழ்நாட்டுப் பெரியார் அவர்களது அறிவுத் தேட்டத்தினை இறைவன் ஏற்று, அதற்கு விடை பகரும்வண்ணம் தம்மை வெளிப்படுத்தினார்.

இவ்வாண்டு கூண்டு விளக்கேற்றும்போது மேற்கண்ட கருத்துக்களை மனதிற் கொள்வோம். பிறப்பின் திருநாள் ஆண்டுக்கொருமுறை வரும் நாளென நாம் கருதாது; எல்லைகளையும், வரம்புகளையும் தாண்டி கிறிஸ்து தம்மை நமக்கு வெளிப்படுத்திக்கொண்டு வருகிறார் என்பதை உணர்ந்து, விசுவாசத்துடன் நாமும் வாழ்க்கையின் எல்லைகளைத்தாண்டி இயேசுவின் துணையுடன் முன்னேறுவோம்.

## மனித மேன்மையும் — மனித உரிமைகளும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

...ரும் கூட ஆடிப்பாடிக் கொண்டு கால்நடைப் பயணத்தை ஏற்றுப் பொதுப் போக்குவரவுக்குச் சாதனமான பஸ் பகிஸ்கரிப்பைத் தொடர்ந்தனர். இதனால் அமெரிக்கர்களுடைய மனச்சாட்சி உறுத்தத் தொடங்கியது; அமெரிக்க பொது அபிப்பிராயம் கறுப்பு இன மக்களின் கோரிக்கையிலுள்ள நியாயத்தை ஏற்றுச் சாதகமாக உருவாகிற்று. தொழில் அதிபர்களும், தனிப்பட்ட அமெரிக்கர்களுமான வெள்ளையர் யாவரையும் தமது சொந்த வாகனங்களிற் கொண்டு செல்ல ஆரம்பித்தனர். பஸ் கம்பனிகள் பணிந்தன. பாகுபாட்டிற்கு எதிரான மற்றொரு போராட்டம் வெற்றி பெற்றது.

கறுப்பு இன மாணவனை பல்கலைக்கழகக் கதவடைப்புக்கு எதிராக கென்னடி சகோதரர் எடுத்த நடவடிக்கைகளை இன வெறியர்களின் பகைக்கு அவரை இலக்காக்கியது. இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்டதால் மதவெறியன் கோட்சே காந்தியடிகளைக் கொன்றான். இப்படிப் பல பேரின் உயிர்ப் பலியால், வராது வந்து கிட்டியதே மனித உரிமைகள். மனித உரிமைகள் சாசனம் மனிதனின் பிறப்புரிமையான மனித உரிமைகளைப் பிரகடனப்படுத்திய நாளையே அனைத்துலகும் "மனித உரிமைகள் நாளாக" அனுட்டிப்பது தெரிந்ததே! மனித மேன்மையினை எடுத்துக்காட்டும் அந் நாளை நாமும் சிறப்பாக அனுட்டிக்க வேண்டும்.

கல்வியில், கல்லூரிகள் (பல்கலைகழக) அனுமதியில் இன, மொழி அடிப்படையில் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களுக்கு நிகழும் கதவடைப்பும் மனித உரிமை மீதான மீறுதலே! பால் வேறுபாடு காரணமாக தோட்டத்துப் பெண் தொழிலாளருக்குச் சம சம்பளம் மறுக்கப்படுவதும் ஒத்தமனித உரிமை மீறுதலே!

இப்படிப்பட்ட மீறுதல்களை விசாரித்து நிவாரணம் அளிக்கவே ஐ. நா. சபை மனித உரிமைகள் மீதான ஆணைக்குழுவை நிறுவியுள்ளது. பாதிப்புககு உள்ளானவர் சகலர் சார்பிலும் மேறபடி ஆணைக்குழுவிடம் முறையிடலாம்.

"மனித உரிமைகள்" பற்றிய இலக்கியங்கள் நிறைய வெளிவர இத் தினம் பயன்படவேண்டும். அதன் மூலம் உள்நாட்டில் சிங்கள இனத்தினர் மத்தியிலும் பொது அபிப்பிராயத்தைச் சாதகமாக்கிக் கொள்ளலாம். தமிழ் இனம் இனவொதுக்கலில் இருந்து தப்பிப் பிழைக்க மாற்று வழி வேறு கிடையாது. வாழ்க "மனித உரிமைகள் தினம்" வெல்வோம் "மனித உரிமைகள்".

— திரவியம்.

## மரணம்

### திரு. லூயிஸ் சவுந்தரநாயகம் உவில்லியம்ஸ்

வட்டுக்கோட்டைச் சபையைச் சேர்ந்த திரு L. S. உவில்லியம்ஸ் கடந்த மாதம் 28-ம் திகதி, தமது 71 ஆம் வயதிற் காலமானார். இவர் நெடுங்காலமாக எங்கள் சபைகளில் ஊழியம் புரிந்த கனம் உவில்லியம் போதகரின் மகனுவார். பல ஆண்டுகள் யாழ்ப்பாணக் கல்லூரியின் அறிவியற் பகுதியில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். வட்டுக்கோட்டைச் சபையின் செயலாளராகச் சிறந்த பணி புரிந்தவர்.

இவரின் பிரேத சேம ஆராதனை இவரது இல்லத்தில் கடந்த மாதம் 30-ம்திகதி சபைப் போதகர் அருட்திரு. L. N. ஹிச்கொக் அவர்களால் நடத்தப்பட்டது. அருட்பெருந்திரு எஸ். குலேந்திரன் அவர்கள் இரங்கலுரை நிகழ்த்தினார். அருட்பெருந்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் செபஞ்செய்து ஆசீர்வாதங் கூறினார். சேமக்காலையில் சபைப் போதகராலும் பேராயர் எஸ். குலேந்திரன் அவர்களாலும் நல்லடக்க ஆராதனை நடத்தப்பட்டது.

## செய்திகள்

### கருத்தரங்கு

மனித உரிமைகள் தினக் கருத்தரங்கு ஒன்று யாழ்ப்பாணம் வேம்படி வீதியிலுள்ள றிமர் மண்டபத்தில் இம்மாதம் 10 ஆம் நாள் மாலை 5-00 மணிக்கு நடைபெறும். இக்கருத்தரங்கு, 'கல்விச் சுதந்திரம் — கருத்துச் சுதந்திரம்" என்ற பொருளில், யாழ். வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் டாக்டர் கனகரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெறும். இக் கருத்தரங்கில், திரு சுப்பிரமணியம் (முன்னாள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர்), திரு. எஸ். பூரணம்பிள்ளை (பரி. யோவான் கல்லூரி அதிபர்), திரு. எம். சிவசிதம்பரம் (முன்னாள் உப-சபாநாயகர்) ஆகியோர் கலந்துகொள்வார்களென அறிகிறோம்.

### இடமாற்றம்

இவ்வாண்டு மே மாதம் தொடங்கி, சி. எஸ் ஐ. கொழும்புச் சபையில் உதவி-ஊழியனுகக் கடமையாற்றி வந்த திரு. எஸ். ஜெயநேசன் இம்மாதம் தொடங்கி வரணிச் சபைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இவர் வரணியில் உள்ள சபையின் ஊழியனுகவும், இங்கு நமது திருமாவட்டத்தின் ஆதரவில் நடைபெறும் பண்ணைக்குப் பொறுப்பாயும் கடமையாற்றுவார். சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் நடைபெற்ற இறையியல் மாணவர் மாநாட்டில், மதுரையிலுள்ள தமிழ்நாடு இறையியற் கலலூரியின் பிரதிநிதியாகத் திரு. ஜெயநேசன் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வருகையின் இரண்டாம் ஞாயிறு
### பழைய ஏற்பாட்டில் கிறிஸ்து

நாள்தோறும் வாசிக்கப்படவேண்டிய திருமறைப் பாடங்கள்:

| | | |
|---|---|---|
| தி. | ஏசா. 11 : 1 — 10 | — மக்களுக்கு ஒரு சின்னம். |
| செ. | சங். 40 : 1 — 8 | — பொறுமையுடன் காத்திருந்தேன். |
| பு. | ரோ. 15 : 4 - 13 | — கிறிஸ்துவும் திருவாக்கும். |
| வி. | லூ. 24 : 18 — 27 | — விளங்கச் செய்யும் கிறிஸ்து. |
| வெ. | உபா. 18 : 9 — 19 | — வரவிருக்கும் இறைவாக்கினர். |
| ச. | அப். 8 : 26 — 40 | — எத்தியோப்பிய அரசமைச்சர். |

# The Morning Star

**5th December, 1975**

## The Freedom of Knowledge

Of all the rights and freedoms to which organised humanity committed itself without dissent, on that memorable day the 10th of December, 1945, the most precious are those which secure the inward freedom of man, the full and unimpaired right to think and believe freely. What constitutes the humanity of man more than anything else is this right to be and to become.

The core of these rights is enshrined in the Universal Declaration of Human Rights and in Article 18: "Everyone has the right to freedom of thought, conscience and religion; ......" And in Article 19: "Everyone has the right to freedom of opinion and expression; ...... and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers." Oral communication may be outpaced by books, these by newspapers, these again by the radio, and soon TV may outstrip all these; but, the essential thing is to ensure that those who have ideas to communicate should be free to do so and for the readers and the listeners to judge. It is not for a group with State power behind them to seek to enslave the minds of men, whether through direct control of mass media, or through indirect control, such as advertisement patronage or newsprint allocation or enhanced postal charges. Or, the betrayal may spring from the minds of clever speakers and writers who themselves lack firm commitment to truth. Yet, the theory of freedom of thought and expression extends to "granting freedom to propagate error"; for, "it is the truth itself which suffers when the expression of error is forcibly suppressed." When all is said, the freedom of information remains the touchstone of all the freedoms.

* * *

Neither is the State entitled to control a nation's seats of learning. Indeed, the university, based on things of the mind and spirit, like religion, is society's safeguard against the State based on power. For, on one hand, the university is central to national growth, its quality as a seat of learning being the measure of a nation's development. On the other hand, in a world perplexed by the peril of uncriticised ideas, the university and university men have a positive function of standing for the 'intellectual virtues'. It is in this context that it becomes the duty of all those connected with higher education and all those who value freedom, to defend the ideal of the autonomy of the university as the indispensable basis of our survival as a free society. A corollary of such institutional freedom for the university is academic freedom; which is another name for freedom of thought and expression of the individuals who make the university community. It is the right to decide for themselves, "who may teach, what may be taught, how it shall be taught, and who may be taught." In essence, it means that only those who teach in the university should direct the inner process of its education in much the same way as those connected with the profession of law alone function in the legal system. Ideas should originate at that level and seep upwards rather than be imposed from above, certainly not be imposed by the State and its agents.

Where article 20 speaks of "the right to freedom of association" and article 21 of "the will of the people" and of "the right to, take part in the government of the country," this applies as much to university government as well as to the rest of government. For the university not to be concerned with promoting the freedom of knowledge will be to perform less than its mission; for it to compromise with the State over its own autonomy would be treason to civilization.

* * *

Equal access for everyone to the university is part of the freedom of knowledge. Article 26: "Everyone has the right to education ...... Higher education shall be equally accessible to all on the basis of merit." Equal access also derives from the concept of equality before the law (Art. 7) and the prohibition of discrimination on grounds of race, language or religion (Art. 2).

The safeguard against racial discrimination is that in the world of today. "with so many bright prospects everywhere, and the new concept of life-long education, no one will agree to become a second class human, with less equality and less dignity than his fellows, and less chance of self-fulfilment, grounded in his native land." If of students belonging to the same country, sitting the same examination, having followed the same course, sometimes in the same schools (like Royal, St. Thomas', Ladies) one ethnic group finds to their dismay that hundreds who secured lower marks get admission to the university because of a device called media-wise "standardisation," unknown elsewhere in the world, they would certainly be material, with their parents, for the "brain drain".

Alas, education which should be the instrument for creating a counter-society based on human rights, should itself have become a force for unbuilding this young nation! If the university is to help the nation to further its unity and identity, it should no less develop its own full identity. Else, what a short-sighted betrayal of the ideal of the freedom of knowledge!

*K. N.*

*OBITUARY*

### He served Jaffna College for 36 years

We are sorry to record the death which occurred on Friday (28th of November) at Vaddukoddai of Mr. Louis Soundranayagam Williams (71), the son of the late Rev. E. T. Williams and Mrs. Williams, former Workers in the Jaffna Council of the South India United Church. Mr. Williams was on the Staff of Jaffna College as a teacher of Chemistry for 36 years. He retired in 1964.

A person of strong religious convictions and confirmed values, Mr. L. S. Williams held a large place in the life of the church and the community. He rarely missed the Sunday Church Service or the Wednesday Morning Communion Service at the Vaddukoddai Church.

The Funeral Service was held at his residence on Sunday (30th November) at 4 p. m. Rev. L. N. Hitchcock conducted the Service. The Rt. Rev. S. Kulandran in his Sermon referred to the parable of the Talents and said that all talents big or small are God's trust given to man. Soundram Williams was one who was conscious at every turn that he had to give an account of his talents to God. His life was one lived in the backdrop of Eternity. Whether as a teacher of Chemistry for more than three and a half decades or as a Churchman, he always read widely and was well informed in many fields. Bishop Kulandran referred to his close association with Soundram Williams for many years from the time they were university students in Colombo and Calcutta to the time they both lived as neighbours at Vaddukoddai when Soundram often shared with him the knowledge he had acquired by reading. He was one who would certainly be greeted with the words "Well done, Thou good and faithful servant, Enter thou into the joy of the Lord." The Service concluded with Prayer and Benediction pronounced by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar.

The committal was also performed by the Rt. Rev. S. Kulandran, assisted by Rev. L. N. Hitchcock. The deceased leaves behind besides his wife Lily, three daughters Mrs. Jeyarajah, Mrs. David Jesudason and Mrs. Selvarajah, and a very large circle of relations and friends to whom his sudden parting had meant a very sad wrench.

### Interment of Ashes

The ashes of the late Miss Grace J. Paul M. A. (Columbia), daughter of the late Rev. Issac Paul and Mrs. Paul were brought to her village, Uduvil, on Wednesday, the 3rd of December at 5 p. m. from Colombo and were interred at the Uduvil Church cemetery. The Service was conducted by the Rev. D. R. Ambalavanar, the Presbyter of the Uduvil Church. At the conclusion of the Service the Rt. Rev. S. Kulandran pronounced the Benediction.

### Satellites can save lives

"In Bangladesh we lost half a million lives" says Arthur C. Clarke, British Scientist and writer who was in Sri Lanka, "because, though the U. S. Satellites tracked the 1974 monsoon rains all the way, getting information to the people did not exist." He also said that without information from satellites, *Hurricane Camille* which lashed the southern United States in 1969 would have taken 50,000 lives — equal to all the American casualties in Vietnam. "The economic implications of using satellites to predict the onset and extent of the monsoons, are gigantic' says the scientist. The weakness lies in the ground communication network.

Arthur Clarke is the author of "*2001 Space Odyssey*" and "*Rendezvous with Rama.*" He is one of the world's leading science fiction writers and space prophets.

### Jesus as Liberator, Unifier

*(Contd. from first page)*

them from the modern Pharaohs, it can only be bad news to North Americans to discover that according to the Exodus scenario many of us are serving in Pharaoh's court and that Pharaoh is finally doomed."

Later in the question period Dr. Brown agreed that the situation of division was a provisional one and should not be overemphasized. But he was concerned, he ssid, "that we do not move so quickly to Jesus as Unifier that we ignore our divisions."

Turning to Jesus as Unifier, Dr. Brown outlined the task ahead. "We have to demonstrate that we have been sufficiently liberated to go beyond our divisions and begin to embody the unity to which Jesus the Unifier calls us." There is only one way to do that, he said, and that involves confession and repentance before God and to one another.

"This will involve reaching out our hands to one another at risk, officially and unofficially, individually and coporately, hoping to be heard and accepted, but willing if necessary to endure rebuff patiently, believing that sooner or later the healing power of the risen Christ will be able to reach out across the awesome divisions by which we are presently scarred.

"By making such steps toward one another we could begin to incarnate a little more fully the unity we so easily talk about," he said.

A new affirmation for Nairobi 1975 might be the following: "We intend to struggle together" — not only with one another assembled here but also on behalf of all God's children *not* here assembled, especially the non-persons, the "very least" of the sisters and brothers of Jesus Christ. At the suggestion of a questioner, Brown amended this statement to "struggle together in love".

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna, on Friday, 5th December, 1975.